ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1792/22 - 2013 ජනවාරි මස 10 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.01.10

*1792/22 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

*அறிவித்தல்*

**போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபை**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, அக்கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள தீர்மானங்களைச் செய்வதற்கு அதற்குள்ள உத்தேசம் பற்றி இத்தால் அறிவிக்கின்றது.*

*உத்தேச தீர்மானங்களுக்கான ஆட்சேபனைகள், சபைத் தலைவர் 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் பெற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

*வி. பி. பீ. கே. வீரசிங்க,*
*தலைவர்,*
*போறணைத் தொழிலுக்கான*
*சம்பளச் சபை.*

*தொழில் திணைக்களம்,*
*கொழும்பு 5,*
*2012, திசெம்பர் 12.*

**அட்டவணை**

*போறணைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1958 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதிய 11605 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டஅறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவாறானவையும் முடிவுகள், கீழே*

காட்டப்பட்டுள்ளவாறு அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

"II ஆம் பாகம்

**மாதமொன்றுக்குக் கொடுபட வேண்டிய ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்**

| ஊழிய ஆண்டு | "ஏ" வகுப்பு | "பீ " வகுப்பு | "சீ" வகுப்பு |
|---|---|---|---|
| | ரூ. ச | ரூ. ச. | ரூ. ச. |
| 1 - ஆம் ஆண்டு | 10,530.00 | 9,750.00 | 8,970.00 |
| 2 - ஆம் ஆண்டு | 10,680.00 | 9,875.00 | 9,070.00 |
| 3 - ஆம் ஆண்டு | 10,830.00 | 10,000.00 | 9,170.00 |
| 4 - ஆம் ஆண்டு | 10,980.00 | 10,125.00 | 9,270.00 |
| 5 - ஆம் ஆண்டு | 11,130.00 | 10,250.00 | 9,370.00 |
| 6 - ஆம் ஆண்டு | 11,280.00 | 10,375.00 | 9,470.00 |
| 7 - ஆம் ஆண்டு | 11,430.00 | 10,500.00 | 9,570.00 |
| 8 - ஆம் ஆண்டு | 11,580.00 | 10,625.00 | 9,670.00 |
| 9 - ஆம் ஆண்டு | 11,730.00 | 10,750.00 | 9,770.00 |
| 10- ஆம் ஆண்டு | 11,880.00 | 10,875.00 | 9,870.00 |
| 11- ஆம் ஆண்டு | 12,030.00 | 11,000.00 | 9,970.00" |

1- 655

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.